**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு – 2013**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி (திருத்த அதிகாரச்சட்டத்தின்) 10(ஈ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

பணிக்கொடைச் செலவினக் கணிப்பீட்டு வழுவின் காரணமாக ரூபா 142,883 தொகை அதிகரித்து ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணனி மற்றும் உபபாகங்கள் பேரேட்டுக் கணக்கின் மீதி ரூபா 15,309,664 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் ரூபா 15,359,464 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 49,800 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 3,448,406 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1994 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த எஞ்சிய சகல வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை |

| | |
|---|---|
| 01/2002 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.5(அ) பிரிவின் பிரகாரம் ‘‘சீ’’ தரத்திலுள்ள கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ வாகனம் தலைவர், பிரதான பதவிநிலை உத்தியோகத்தர் மற்றும் பதவிநிலைப் பணிப்பாளர்களுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட முடியும். இந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் 05 பணிப்பாளர்களுக்கும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் மாத்திரம் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,241,100 தொகை எரிபொருள் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 3,229,145 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,495,496 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,724,641 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(அ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கொள்கைகள், உபாயங்களை முறையாகத் தயாரித்து ஆய்வு செய்தல் மற்றும் நாளதுவரையாக்குவதற்காக 04 பிரிவுகளின் கீழ் 44 நிகழ்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட அளவு 32 ஆகும். அதன் பிரகாரம் இலக்கை அடைய முடியாத நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

(ஆ) கைத்தொழில் பிரிவை அபிவிருத்தி செய்வதற்காக போக்குவரத்துப் பிரிவில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண தொழிற்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு 02 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய தொழிற்தகைமை முறைமையினை பரவலாக்குதல் மற்றும் பேணுவதற்காக 05 பிரிவுகளின் கீழ் 748 நிகழ்ச்சித்திட்டங்களைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக 156 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. 592 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பிரிவு, தனியார் பிரிவு மற்றும் இடர்களுக்கு உள்ளாகியவர்களுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 12,467,374 நிதியுதவி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே செலவினமாகக் கணக்கிடப்பட்டிருந்தும் உள்ளபடியாக செலவிடப்பட்டிருந்ததா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனம், ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பதிவு செய்ய வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு பதிவுசெய்து கொள்வதற்காக ஆணைக்குழுவிடம் போதியளவான வேலைத்திட்டம் காணப்படாமை.

(ii) பதிவுக்காலம் முடிவடைந்த நிறுவனங்களின் பதிவினை மீளப் புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமை.

(iii) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனம் தொடர்பாக மேற்பார்வை செய்யாமை மற்றும் பதிவு செய்யாத 44 நிறுவனங்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை.

(இ) தேசிய திறன் நியமம் (NCS) தயாரிப்பதற்கு அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் தேயிலை உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் அழகியல் (Cosmetology) போன்ற பாடநெறிகளுக்காக தேசிய திறன் நியமம் 2013 மே 30 ஆந் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2 மாதங்களைவிடத் தாமதமாகி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 487,073 தொகை செலவிடப்பட்டு 26 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இந்தச் செயற்பாடுகள் 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 08 மாதங்கள் எடுத்திருந்தன.

(ஈ) மீளாய்வாண்டில் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,184,760 தொகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 09 ஆராய்ச்சிகள் மீளாய்வாண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ஒரு ஆராய்ச்சி கைவிடப்பட்டிருந்தது. ஆராய்ச்சிப் பிரேரணைகள் சமர்ப்பிக்கும் போது நடைமுறையில் அமுல்படுத்துவதற்குரிய இயலுமை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆணைக்குழுவின் 05 உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு இனங்கியிருந்த போதிலும் அவர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆராய்ச்சிக்காக அது தொடர்பாக திறமைகளையுடைய நிபுணர்களால் மேற்கொள்ள வேண்டுமாயினும் ஆராய்ச்சி செயற்பாடுகளில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் பதவியணியினர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.

(உ) அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட திறன் போட்டிகளில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 4,127,802 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) போட்டி நடவடிக்கைகளுக்காக ஒரு நிறுவனத்திற்கு ரூபா ஒரு மில்லியன் படி நான்கு நிறுவனங்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் முற்பணம் வழங்கப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் அந்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 275,574 தொகையான எஞ்சிய பணம் ஆணைக்குழுவிற்கு மீள வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவின் மேற்பார்வைக்கு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாடற்ற சொத்துக்கள்**

வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 2,000,000 இற்கு அண்ணளவான மீதி ஆண்டு முழுவதும் காணப்பட்டதுடன் அந்த மீதி சில சந்தர்ப்பங்களில் ரூபா 5,000,000 வரை அதிகரித்தமையினால் நிதிசார் முகாமைத்துவத்தின் நலிவினைக் காட்டியது.

**4.4 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 85 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 70 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 16 ஆகவும் மிகையின் எண்ணிக்கை 1 ஆகவும் இருந்தன.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் பரீட்சை மதிப்பீட்டுப் பிரிவை ஸ்தாபிப்பதற்காக 05 பதவியணியினர்களை சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களைச் சேர்த்து அப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக ஒவ்வொரு பிரிவிற்குமிடையே உப இலக்குகள் குறிப்பாகக் காண்பிக்கப்படாதிருந்ததுடன் காண்பிக்கப்பட்டுள்ள உபாய மார்க்கங்களைப் பூர்த்தி செய்யவேண்டிய காலப்பகுதி மற்றும் அதற்கான செலவினம் மற்றும் வருமானம் என்பன காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீடு திருத்தப்பட்டிருந்ததுடன் அத்திருத்தப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும்

இடையே 5 சதவீதம் முதல் 117 சதவீதம் வரையிலான வீச்சில் நிலவியமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் நிலவிய குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதி முகாமைத்துவம்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்